# I சாராம்சம்

*எனது பெற்றோர்கள் என்னை புலிகள் இயக்கத்திடம் ஒப்படைக்க மறுத்து விட்டதனால் அவர்கள் பதினைந்து பேர் எங்களின் வீட்டுக்குள் வந்தார்கள். அவர்களில் சீருடை தரித்த ஆண்களும் பெண்களும் கைகளில் றைபிள்களுடனும், இடைப்பட்டிகளில் கட்டப்பட்ட துப்பாக்கிகளோடும் வந்திருந்தனர்.... என்னை கொண்டு செல்வதற்கு அவர்கள் வந்த, அந்த அதிகாலை நேரம் நான் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தேன். முதலில் அவர்கள் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். எனது சிறிய தாயாராக இருக்கலாம் என்ற நினைப்பில் எனது தாயார் வாசல் கதவைத் திறந்தார். .....திடீர் என வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் என்னை தற தறவென்று வீட்டுக்கு வெளியே இழுத்துச் சென்றனர். "என்ன செய்கிறீர்கள், என்ன நடக்கிறது இங்கே?" என எனது தந்தையார் அவர்களை நோக்கி கத்தினார். ஆனால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சில சிப்பாய்கள் எனது தந்தையை அருகில் இருந்த புதர்களை நோக்கி இழுத்துச் சென்று அவரை கடுமையாக தாக்கினார்கள்... அதை தடுக்க முயன்ற எனது தாயாரை அவர்கள் கீழே தள்ளி விழுத்தினார்கள்.*

-2003 ம் ஆண்டில் தனது 16ம் வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பெண்

*ஒரு நாள் அவர்கள் எனது 17வயதுடைய தம்பியை கொண்டு சென்றனர். அவன் சந்தையில் இருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் வேளையில் பிடிக்கப்பட்டான். "எனது வாழ்க்கையில் பல வருடங்களை நான் உங்களுக்கு தந்திருக்கிறேன், எனது உடல் நலத்தையும் தந்திருக்கிறேன். என் தம்பியை என்னிடம் திருப்பி தாருங்கள், அவன் ஒருவன்தான் என்னை பார்த்துக் கொள்வதற்கு இருக்கிறான், அவன்தான் என்னை மலசல கூடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், படுக்கைக்கு கொண்டு செல்ல வேண்டும், என்று சொல்லி அவர்களிடம் கெஞ்சி மன்றாடினேன். அவர்கள் அவனை விடுவிக்கவில்லை மாறாக இக்கடத்தல் பற்றி நான் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவித்தால் அவர்கள் என்னைச் சுட்டு விடுவதாக அச்சுறுத்தினார்கள். அது மட்டுமன்றி, எந்த நேரத்திலும் நான் அவர்களுடன் திரும்பச் சேரவேண்டி வரும் என்று சொன்னார்கள். என்னை அவர்களுக்கு எல்லா வழிகளிலும் கொடுத்த எனக்கு இப்படித்தானா அவர்கள் எனக்கு நன்றி காட்டுவது? ஏன் அவர்கள் எனக்கு இப்படி செய்கிறார்கள்?*

-தனது 16வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டு சண்டையில் மிக மோசமாக அங்கவீனமான ஒரு பெண்

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் அரசாங்கத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் (புலிகள் இயக்கம்) இடையே முடிவுக்கு கொண்டுவரப்பட்ட மோதல் தவிர்ப்பு நிலமையானது, சிறீ லங்காவில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் குடும்பங்களைப் பொறுத்தவரை, கடந்த 20 வருடகால மோசமான மோதல் சூழ்நிலைமைக்கு எவ்வித நிம்மதியையும் கொண்டு வரவில்லை எனலாம். மோதல் நிலமையானது முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து, சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவரும்படி திரும்பத் திரும்ப புலிகள் இயக்கத்தின் தலைமையை நோக்கி கோரிக்கைகள் விடப்பட்டாலும், நடைமுறையில் இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தொடர்ந்தும் நடைபெற்றே வந்துள்ளது. அது மட்டுமன்றி முன்னர் புலிகள் இயக்கத்தால் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடமாடக்கூடியதாக இருந்த வடக்கு கிழக்கின் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் தற்போது இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது நடைபெறுகின்றது. 2004ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பிளவின் பின்னர் விடுவிக்கப்பட்ட சிறார்களை மீண்டும் படையில் சேர்த்தது உட்பட, யுத்த நிறுத்த காலகட்டத்தில் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவே இவ்வறிக்கையானது குறிப்பாக தன் கவனத்தை செலுத்துகின்றது.

தமிழ் சிறார்களைப் பொறுத்தவரை, அவர்கள் தமது 11 அல்லது 12வயதுகளிலேயே ஆட்சேர்ப்புக்கான அபாயத்திற்கு முகம் கொடுக்கின்றனர். புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக தமிழ் வீடுகளுக்கு சென்று தமது "இயக்கத்திற்கு" ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு பிள்ளையைத் தர வேண்டும், என அறிவித்து வருகின்றனர். இதனை மறுக்கும் குடும்பங்கள் அச்சுறுத்தலுக்கும் மோசமான இடைஞ்சல்களுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர். தாங்கள் மறுக்கின்ற பட்சத்தில் ஒன்றில் தங்களுடைய பிள்ளை பலவந்தமாக கொண்டு போகப்படுவது, அல்லது அப்பிள்ளைக்காக அக்குடும்பத்தில் இருக்கும் இன்னுமொரு பிள்ளையை அல்லது ஒரு குடும்ப அங்கத்தவரைக் கொண்டு போவது அல்லது அக்குடும்பமானது பலாத்காரமாக அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றப் படுவது போன்றவையே அங்கு நடப்பதாக பெற்றோர்கள் தெரிவித்தனர். புலிகள் இயக்கத்தினர் இவ் அச்சுறுத்தல் நடவடிக்கையை மிகத் திறம்பட மேற்கொள்ளுகின்றனர்: அடிக்கடி சிறார்கள் வீடுகளில் இருந்து இரவு நேரங்களில் கடத்தப்படுதல் அல்லது சிறார்கள் வீதிகளில் நடக்கும்போது, பாடசாலைக்கு போகும்போது, கோவில் திருவிழாவிற்கு போகும்போது கடத்தப்படுதலும் நடைபெறுகின்றது. தமது பிள்ளைகள் கடத்தப்படுவதை தடுக்க

முனையும் பெற்றோர்கள், புலிகள் இயக்கத்தின் மோசமான வன்முறைகளுக்கும் தண்டனைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டியிருக்கிறது.

அநேகமாக சிறார்கள் ஒருமுறை புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள் தமது குடும்பங்களோடு தொடர்பு வைக்க அனுமதிக்கப் படுவதில்லை. புலிகள் இயக்கத்தினர் அநேகமாக அவர்களை கடுமையான பயிற்சிகளிலும் சிலவேளைகளில் கொடுமையான பயிற்சிகளிலும் ஈடுபடுத்துகின்றனர். அவர்களுக்கு இராணுவத் தந்திரோபாயங்கள் கற்பிக்கப் படுவதோடு, வெடிகுண்டுகள் கண்ணிவெடிகள் உட்பட ஆயுதங்கள் போன்றவற்றை கையாளுவதையும் அவர்கள் கற்றுக் கொள்ளுகின்றனர். தவறு விடுபவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தப்பி ஓட முனைபவர்களை புலிகள் இயக்கத்தினர் மிக மோசமாக தண்டனைக்கு உள்ளாக்குகின்றனர். தப்பியோட முனைகின்ற சிறார்கள் அவர்களின் பயிற்சிப் பிரிவினர் அனைவருக்கும் முன்னால் வைத்து மிக கடுமையாக தாக்கப்படுகின்றனர். இப்பகிரங்கத் தண்டனையானது தாமும் தப்பி ஓடலாம் என எண்ணங்கள் தோன்றக்கூடிய ஏனைய சிறார்களின் மனோதிடத்தை சிதைப்பதற்காக மேற்கொள்ளப் படுகின்றது.

2002ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே நோர்வே அரசாங்கத்தின் மத்தியத்துவத்திற்கு ஊடாக கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் கடந்த 20 வருடங்களாக 60,000 உயிர்களைப் பலிகொண்ட கடும் மோதல் நிலமைக்கு உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஓர் முடிவை கொண்டுவந்திருக்கிறது. எவ்வாறாயினும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்மறை விளைவாக, புலிகள் இயக்கமானது சிறார்களை படைகளில் சேர்ப்பது மற்றும் தீவிர ஆட் சேர்ப்பில் ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகள், அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மோசமாக அதிகரிக்கவே வகை செய்திருக்கின்றது என்றே கூறத் தோன்றுகிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்னும் இப்பதமானது "விடுவிக்கப்பட்ட பகுதி" என அழைக்கப்படும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதமேந்தாத புலிகள் இயக்க அங்கத்தவர்கள் சட்ட பூர்வமாக உள் நுளைவதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. உண்மையான யதார்த்த நிலை யாதெனில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட வடக்கு கிழக்கின் பிரதான நகரங்களில் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் போன்ற விடயங்களில் புலிகள் இயக்கத்தினரே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவ் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி புலிகள் இயக்கமானது, தமிழ் மக்கள் அதிகமாக வாழும் இப்பகுதிகளில் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதை பரவலாக மேற்கொள்ளுகின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதில் இருந்தே புலிகள் இயக்கத்தினர் தமது படைகளின் அளவை விஸ்தரித்துக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொண்டு வந்துள்ளனர். இறுதியான சமாதான ஒப்பந்த இணக்கப்பாடொன்று வருகின்ற பட்சத்தில் வடக்கு கிழக்கை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்காகவோ அல்லது சமாதானப் பேச்சுக்கள் முறிவடைகின்ற பட்சத்தில் இராணுவ ரீதியில் தாம் தயாராக இருக்க வேண்டும் என்கின்ற நோக்கிலோ அல்லது மேற்சொன்ன சகல காரணங்களுக்குமாகவோ புலிகள் இயக்கத்தினர் இச்சமாதான பேச்சுவார்த்தை காலகட்டத்தில் தமது கரங்களை பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர் என்று கூறலாம். இச் சமாதானக் காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தினர் தமது படைகளில் சேர்த்துக்கொண்ட சிறார்களின் உண்மையான எண்ணிக்கையானது தெளிவில்லாது இருந்தாலும் கூட சிறீ லங்கா அரசாங்கம் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியிடும் தகவல்களின்படி இக்காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தினர் பல்லாயிரக்கணக்கான புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொண்டுள்ளனர் என நம்பப்படுகின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து 2004ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி வரை, வயது குறைந்த சிறார்கள் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்மை தொடர்பான 3,516 சம்பவங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமானது (UNICEF- யுனிசெப்) ஆவணப் படுத்தியுள்ளது. (கீழே குறிப்பிடப் பட்டுள்ளபடி, முன்னர் விடுவிக்கப்பட்டு பின்னர் மீள சேர்க்கப்பட்டவர்கள் உட்பட). இக்கால கட்டத்தில் 1,206 சிறார்களை புலிகள் இயக்கத்தினர் சம்பிரதாய பூர்வமாக விடுவித்தனர். ஆனால் நவம்பர் 2004ம் ஆண்டுவரை யுனிசெப் அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட நபர்களில் இன்னும் 1,395 பேர் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.[1] அதே வேளை உண்மையாக புலிகள் இயக்கத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறார்கள் தொகையில் ஒரு பகுதியினர் பற்றிய விபரங்கள் மட்டுமே தம்மால் ஆவணப்படுத்தப் பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனம் குறிப்பிட்டுச் சொல்கிறது. இதற்கு காரணங்களாக இவ்வாறு பதிவு செய்யக்கூடியதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக பல குடும்பங்கள் அறியாமல் இருப்பதும், பலர் அவ்வாறு செய்வதற்கு அச்சப்படுவதும் அல்லது யுனிசெப் காரியாலயம் ஒன்றைச் சென்றடைவதற்கு உள்ள சிரமங்களையும் கூறலாம். புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட அல்லது வீடுகளுக்கு திரும்பிய சிறார்களில் 25வீதமானோர் மட்டுமே முன்னர் யுனிசெப் நிறுவனத்தின் புள்ளி விபரக் கோவைக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளனர். எனவே புலிகள் இயக்கத்தினுள் இன்னும் எஞ்சி இருக்கின்ற சிறார்களின் தொகையானது 1,395 தொகையை போன்று நான்கு மடங்கு அதிகமாக இருக்கலாம் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

2004ம் ஆண்டு மார்ச் மாதம் வடக்கே வன்னியென்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்தில் அதியுயர் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசுவாசமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான படையில் இருந்து, புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண தளபதியான கேணல் கருணா பிரிந்து சென்றார். 2004ம் ஆண்டு ஏப்ரல்

[1] புள்ளி விபரங்கள் 2004 நவம்பரில், யுனிசெப் அமைப்பினால் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கப்பட்டன.

மாதத்தில் புலிகள் இயக்கத்தின் வன்னிப் பிரிவினர் கருணாவின் கிழக்குப் படைகளை தாக்கி தோற்கடித்ததுடன், அது மிக விரைவில் கலைக்கப்பட்டது. கருணாவிற்கு கீழ் இருந்த 2000ற்கும் மேற்பட்ட சிறார் படையினர் ஒன்றில் தாமாகவே விலகிச் சென்றனர், அல்லது குடும்பங்களிடம் செல்லுமாறு தமது தளபதிகளினாலேயே ஊக்குவிக்கப்பட்டனர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது வீடுகளுக்கு திரும்பிய சிறார்கள், மீண்டும் விரைவிலேயே ஆரம்பிக்கப்பட்ட கொடுமையான சோதனைக்கு முகம் கொடுத்தனர். அச்சிறார்கள் வீடு திரும்பிய சில வாரங்களுக்குள்ளேயே, சிறார்கள் உட்பட முன்னர் கருணாவோடு இருந்த அங்கத்தவர்களை மீள தமது படைகளில் சேர்த்துக் கொள்வதற்காக தீவிர பிரச்சாரத்தை புலிகள் இயக்கத்தினர் முடுக்கிவிட்டனர். சீருடைகளோடும் ஆயுதபாணிகளாகவும் கிராமம் கிராமமாகவும், வீடு வீடாகவும் சென்ற, வன்னிப் புலிகள் இயக்க அங்கத்தவர்கள், தமது முன்னாள் அங்கத்தவர்களை, மீண்டும் புலிகள் இயக்கத்தில் வந்து சேர வேண்டும் என வற்புறுத்த ஆரம்பித்தனர். இயந்திர முச்சக்கர வண்டிகளைப் பாவித்து (Auto Rickshaw) அறிவிப்புக்களை மேற்கொண்டும், கிராமங்களில் கூட்டங்களை நடத்தியும், குடும்பங்களுக்கு கடிதங்களை அனுப்பியும் மீண்டும் பிள்ளைகளைத் தம்மிடம் தருமாறு புலிகள் இயக்கத்தினர் தமது வற்புறுத்தலை செய்தனர்.

வீடுகளுக்குத் திரும்பிய சிறார்களை அநேகமாக பலாத்காரத்தை பாவித்தே புலிகள் இயக்கத்தினர் மீளத் தம்மோடு சேர்த்துக் கொண்டுள்ளனர். தமது பிள்ளைகள் இரண்டாம் தரமும் புலிகள் இயக்கத்தினால் சேர்த்துக் கொள்ளப்படுவதை தடுக்க முயன்ற பெற்றோர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர் அல்லது தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். எஞ்சியுள்ள சிறார்களும் அவர்களின் குடும்பங்களும் மிகுந்த அச்சத்துடனேயே வாழுகின்றனர். பாடசாலைகளுக்கு சென்றுவிட்டு வீடு திரும்புகின்ற வழியில் மீண்டும் தமது பிள்ளைகள் புலிகள் இயக்கத்தினால் கடத்திச் செல்லப் படலாம் என்கின்ற அச்சம் காரணமாக பாடசாலைகளுக்கு மீளப் பிள்ளைகளை அனுப்பி வைப்பதற்கு பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். சில பிள்ளைகள் வீடுகளை விட்டு வெளியே வருவதற்கே அஞ்சுகின்றனர். இன்னும் சிலர் பாதுகாப்புக் கருதி தமது உறவினர் வீடுகளுக்கு சென்றிருப்பதோடு, பலர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை தேடுவதற்கென்று நாட்டைவிட்டே வெளியேறிச் செல்கின்றனர். திருமணம் முடித்தவர்களை புலிகள் இயக்கத்தினர் தமது படைகளில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்னும் ஓர் கண்ணோட்டம் அங்கு நிலவுவதால், அவ்வாறு திருமணம் செய்து கொள்வது புலிகள் இயக்கத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இருந்து தமக்கு ஒருவித பாதுகாப்பை வழங்கும் எனக் கருதி, பல இளைஞர்கள் இளம் பெண்கள் திருமணம் செய்து கொண்டுள்ளனர். புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப் படும்போதே பெண் பிள்ளைகளின் தலைமயிர்கள் கட்டையாக வெட்டப்பட்டு விடுவதால் அவர்கள் மிக இலகுவாக இனங்காணப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாக குறிப்பாக பெண்பிள்ளைகளின் நிலை மிக ஆபத்தாக மாறியுள்ளது.

## *யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் புலிகள் இயக்கத்தினால் சிறார்களை படையில் சேர்த்தலும் பயன்படுத்தலும்.*

சிறீ லங்காவில் நடைபெற்ற இரு தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தில் தொடர்ச்சியாகவே புலிகள் இயக்கமானது சிறார்களை தமது இயக்கத்தில் சேர்த்து, அவர்களை படையினர்களாக ஈடுபடுத்துவதை மேற்கொண்டு வந்துள்ளது. குறிப்பாக 1987ம் ஆண்டு ஒக்டோபரில் புலிகள் இயக்கமானது இந்திய அமைதிகாக்கும் படையினர் மீது தாக்குதல்களைத் தொடுத்து அவர்களை வடக்கில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வெளியேறச் செய்ததில் இருந்தே இதனைச் செய்து வருகிறது.[2]

பல வருடங்களாக புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும், சிறார்களை படையில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையானது பல காரணிகளால் ஊக்குவிக்கப் பட்டுள்ளது. முதலாவதாக, புலிகள் இயக்கத்தின் மிகத் திறமையான பிரச்சார இயந்திரத்தின் மூலம் தொடர்ச்சியாக வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் நடத்தப்படுகின்ற புலிகள் இயக்க வீரர்களை கௌரவிக்கின்ற நிகழ்வுகள், புலிகள் இயக்க அங்கத்தவர்களின் படை அணிவகுப்புகள், பகிரங்கமாக பார்வைக்கு வைக்கப்படுகின்ற யுத்த வெற்றிச் சின்னங்கள் மற்றும் வீடியோ திரைப்படங்கள், உரைகள் என்பவற்றை குறிப்பாக பாடசாலைகளுக்குள் நிகழ்த்துவதன் மூலம் தமிழ் சிறார்கள், பாடசாலைப் பிள்ளைகள் என்போர் வெகுவாக கவர்ந்திழுக்கப் படுகின்றனர். புலிகள் இயக்கத்தினால் மாவீரர் குடும்பங்களுக்கு விசேட கௌரவம் வழங்கப்படுகின்ற அதேவேளை தமது இயக்கத்தின் அங்கத்தவராக பணியாற்றுவது ஓர் உயர்ந்த பணியென்னும் பெருமை உணர்வுக்கூடாகவும் சிறார்கள் அதை நோக்கி கவர்ந்திழுக்கப் படுகின்றனர்.

இரண்டாவதாக, சிறீ லங்கா பாதுகாப்பு படையினரின் அத்துமீறல்களினால் மோசமாக பாதிப்புக்கு உள்ளான அல்லது அழிவுகளை நேரடியாக கண்ணுற்ற சிறார்களும், புலிகள் இயக்கத்தில் போய்ச் சேர்ந்து கொள்ளுவதற்கு உந்தப்படுகின்றனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்களாக, சட்ட விரோதமான தடுத்து வைப்புக்கள், விசாரணைகள், சித்திரவதை, சுட்டுக் கொல்லுதல்,

[2] சிறார்கள் படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவதை நிறுத்துவதற்கான கூட்டமைப்பு, *சிறார் படையினர் தொடர்பான உலக அறிக்கை 2001.* பக்.341

காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் பாலியல் பலாத்காரம் என்பவை குறிப்பாக உள்ளடக்கப்படுகின்றன. 1993ம் ஆண்டில் வடக்கே வட்டுக்கோட்டை என்னும் இடத்தில் 14க்கும் 19 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடையே (adolescents) நடத்தப்பட்ட ஓர் கற்கை ஆய்வின்படி, சிறார்களில் நான்கில் ஒரு பகுதியினர் நேரடியாக வன்முறைகளைக் கண்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.[3] இதன் பிரதிபலனாக பல சிறார்கள் ஒன்றில் தமது குடும்பங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லது நிகழ்ந்த அத்துமீறல்களின் போது தாம் பாதிக்கப்பட்டதினாலும் அல்லது தாம் பாதிக்கப்பட்டுவிட்டோம் என்று கருதுவதாலும், பழி வாங்கும் உணர்வுடன் தம்மைப் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர்.

மூன்றாவதாக, அதிக வறுமையின் காரணமாக சகலதையும் இழந்த நிலை, மற்றும் கல்வி, தொழில் சார் வாய்ப்புக்கள் இல்லாதுபோன நிலமை என்பவையும் இவர்கள் அவ்வாறு போய்ச் சேர்ந்து கொள்வதற்கு உந்துதலாக அமைந்துள்ளன. குறிப்பாக கிழக்கில் உள்ள மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்கள் மிகவும் வறியவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில் வடக்குத் தமிழர்களை விட தரத்தில் குறைந்தவர்கள் என்றும் கணிப்பிட்டுப் பார்க்கப் படுகின்றனர். எனவே அச்சமூகத்தின் சிறார்களைப் பொறுத்தவரையில் தம்மைச் சுற்றியுள்ள ஏனைய மாற்று வழிகள் எல்லாவற்றை விடவும் புலிகள் இயக்கத்தோடு தம்மைச் சேர்த்துக் கொள்வதே சிறந்த மாற்று வழி என அவர்களை கருதவைக்கின்றது.

இறுதியாக, பலவந்தமும் அச்சுறுத்தலும் பெருந்தொகையான சிறார்களை புலிகள் இயக்கத்தினுள் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் "போராட்டத்திற்கு" என்று குடும்பத்திற்கு ஒரு மகனையோ அல்லது மகளையோ நிட்சயம் தரவேண்டும் என்கின்ற கருத்தை புலிகள் இயக்கமானது, தமிழ்க் குடும்பங்களை ஏற்றுக் கொள்ள வைத்துள்ளனர். ஏதாவது ஒரு குடும்பம் இதற்கு மறுப்பு தெரிவிக்கின்ற பட்சத்தில் அவர்கள் பெரும்பாலும் அச்சுறுத்தலுக்கும் இடைஞ்சலுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர். பொதுவாக பல்வேறு தருணங்களில் அவர்களின் பிள்ளைகள் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச சட்டங்களின்படி சிறார்களை பலவந்தமாக படைகளில் சேர்த்துக் கொள்வது மட்டுமே சட்ட விரோதமானது என்பதல்ல. "சுயமாக" வந்து தம் படையணிகளில் இணைந்து கொள்ளும் சிறார்களை ஏற்றுக் கொள்ளுவதன் மூலமும் புலிகள் இயக்கத்தினர் சர்வதேச சட்டங்களை மீறுகின்றனர்.

"குழந்தைப் படைப்பிரிவு" (Baby Brigade) என அழைக்கப்பட்ட பிரிவுக்குள்ளேயே ஆரம்பத்தில் சிறார்கள் சேர்க்கப்பட்டு பின்னர் அவர்கள் ஏனைய பிரிவுகளுக்குள் இணைக்கப்பட்டு கொள்ளுகின்றனர். புலிகள் இயக்கத்தினால் நடத்தப்படுகின்ற அநாதை இல்லங்களில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட சிறார்களைக் கொண்டு சுவிசேசமாக "சிறுத்தைப்புலி படைப்பிரிவு" (Leopard Brigade) என்பது அமைக்கப் பட்டுள்ளதோடு, இதுவும் புலிகள் இயக்கத்தின் ஒரு உக்கிரமான சண்டைப் பிரிவாக கணிக்கப்படுகின்றது.

யுனிசெப் அமைப்பின் அறிக்கையின்படி புலிகள் இயக்கத்திற்குள் சேர்க்கப்பட்டுள்ள சிறார்களில் 40 வீதமானோர் பெண்களே ஆவர்.[4] "தற்போதைய சமூக அமைப்பில் உள்ள பாரம்பரியமான ஒடுக்கு முறையை எதிர்ப்பதற்கும், பெண்களின் விடுதலைக்கு ஒத்தாசை வழங்குவதற்குமே" தமது இயக்கத்தில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக புலிகள் இயக்கமானது கூறுகின்றது.[5] புலிகள் இயக்கத்தினுள் பெண் படையினர் "சுதந்திரப் பறவைகள்" என்றே அழைக்கப்படுகின்றனர். பெண்களைப் படைகளில் சேர்த்துள்ள, ஏனைய மோதல் நிகழும் இடங்களைப் போல் அல்லாது, புலிகள் இயக்கத்தினுள் பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்கள் மிக அரிதாகவே உள்ளன. அது மட்டுமன்றி பொதுவாக எதிர்ப் பாலார் இடையே உறவுகள் தடை செய்யப்பட்டும் உள்ளன.

யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக ஆண்களையும் பெண்களையும் சண்டைகளில் ஈடுபடுத்தி உள்ளது.[6] 1991ம் ஆண்டில் ஆனையிறவு இராணுவ தளத்தின்மீது புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் போது, குழந்தைகள் படைப் பிரிவில் இருந்து எடுக்கப்பட்ட சிறார்கள் அலை அலையாக சண்டையில் ஈடுபடுத்தப் பட்டதோடு, பெரும்பாலும் சிறார்கள் உட்பட 550 புலிகள் இயக்க அங்கத்தவர்கள் உயிர் இழந்துள்ளனர்.[7] 1990களில் நிகழ்ந்த சண்டைகளின் போது கொல்லப்பட்ட புலிகள் இயக்க அங்கத்தவர்களில் 40க்கும் 60க்கும் இடைப்பட்ட வீதமானோர் 18வயதிற்கும் குறைந்த சிறார்கள் என்றே கணிப்பிடப் பட்டுள்ளது.[8] ஐக்கிய நாடுகள் சபையின் (UN) பிரதானமானதோர் கற்கை ஆய்விற்காக மேறகொள்ளப்பட்ட, சிறார்கள் மீதான யுத்தத்தின் பாதிப்பு என்பது தொடர்பான ஆய்வின் அடிப்படையில், பெரும் சண்டைகளின் போது "முன்னணித் தாக்குதல்களில் பெருந்தொகையாக" (*massed frontal attacks)* சிறார்கள்

---

[3] D.J .சோமசுந்தரம், *சிறார்களின் மன அதிர்ச்சி* (யாழ். பல்கலைக்கழகம்: யாழ்ப்பாணம்,1993)
[4] *ஆட் சேர்ப்பில் பால்நிலை வேறுபாடு பற்றிய ஆய்வு*, 2004 நவம்பர் 2ல் யுனிசெப் வழங்கிய தகவல்
[5] சிறார்கள் படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவதை நிறுத்துவதற்கான கூட்டமைப்பு, *சிறார் படையினர் தொடர்பான உலக அறிக்கை 2001.* பக்.342

[6]முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள், மிகவும் குறிப்பாக ஈபிடீபி, மிக அண்மையில் அவர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், உத்தியோக பூர்வமாக நிராயுதபாணிகளாகும் வரை சிறார்களை மோதல்களில் ஈடுபடுத்தியுள்ளனர்.
[7] ரோஹாண் குணரத்னவின் "புலிகள் இயக்க சிறார் போராளிகள்" ஜேன்ஸ் உளவு மீளாய்வு, 1998
[8] (Ibid)

பாவிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. மேலும் பின்தங்கிய கிராமப் புறங்களில் பெண்களையும் குழந்தைகளையும் கொன்று குவிப்பதற்காகவும் 12வயதிற்கும் 14வயதிற்கும் இடைப்பட்ட சிறார்கள் பாவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 10 வயதை ஒத்த இளம் சிறார்கள், கொலைகளை நிறைவேற்றும் நபர்களாகவும் (assassins) பாவிக்கப்பட்டுள்ளனர், என்பதையும் இக்கற்கையானது மேலும் சுட்டிக்காட்டுகின்றது.[9]

சிறார்கள் உட்பட தமது அங்கத்தவர்களிடம் புலிகள் இயக்கத்தினர் சயனைற் குப்பிகள் மற்றும் கைக்குண்டுகளை கொடுத்திருப்பதோடு, சிறீ லங்கா இராணுவத்தினரிடம் எக்காரணம் கொண்டும் தாம் பிடிபடுவதை தவிர்த்துக் கொள்வதற்காக, ஒன்றில் சயனைற் குப்பியை கடித்தல் அல்லது கைக்குண்டினால் தன்னைத் தானே வெடிக்க வைத்துக் கொள்ளுதல் வேண்டும், என்னும் கட்டளையையும் புலிகள் இயக்கத்தினர் அவர்களுக்கு வழங்கியுள்ளனர்.[10]

சிறார்கள் உட்பட தமது அங்கத்தவர்களை தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபடுத்துகின்ற முன்னணி ஆயுத எதிர்ப்புக் குழுக்களிடையே, புலிகள் இயக்கமும் இடம்பெறுகின்றது. 1980களில் இருந்தே புலிகள் இயக்கமானது இதுபோன்ற 200ஐ அண்மித்த தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.[11] இவ்வாறான பல தாக்குதல்களில் அவர்களின் பல பெண் அங்கத்தவர்களை ஈடுபடுத்தியுள்ளனர். அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் பெண்கள் கடுமையான உடல் சோதனைக்கு உள்ளாக்கப் படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதே இவ்வாறு பெண்களை அதிகம் ஈடுபடுத்துவதற்கான காரணமாகும்.

## *யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயல் திட்டமும் (Action Plan) புலிகளின் கடப்பாடும்*

1998ம் ஆண்டில் இருந்தே புலிகள் இயக்கமானது தாம் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை என திரும்பத் திரும்ப ஐக்கிய நாடுகள் சபை சிரேஷ்ட அதிகாரிகள் பலரிடம் பகிரங்கமாக வாக்குறுதிகளை அளித்துள்ளது. 2003ம் ஆண்டில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற் திட்டம் ஒன்று தொடர்பாக, சிறீ லங்கா அரசாங்கமும் புலிகள் இயக்கமும் சம்பிரதாய பூர்வமாக ஏற்றுக் கொண்டனர். அத்துடன் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதை முடிவுக்கு கொண்டு வருவதும், தமது படைகளில் உள்ள சிறார்களை விடுவித்து அவர்களை நேரடியாக அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைப்பது, அல்லது இதற்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள புதிய இடைமாற்று நிலையங்களுக்கு அவர்களை அனுப்பி வைப்பது என்னும் உறுதிப்பாட்டையும் புலிகள் இயக்கம் வழங்கியிருந்தது.

2004ம் ஆண்டு நடுப்பகுதி ஆகும்போது, யுத்த நிறுத்தத்திற்கு பின்னான சமாதானப் பேச்சுக்களினால் வரக்கூடிய பலாபலனாக, கைச்சாத்திடப்பட்ட மனித உரிமைகள் அடிப்படையிலான ஒப்பந்தம் இது ஒன்று மட்டுமேயாகும். புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்படுகின்ற சிறார்களை ஏற்றுக்கொள்ளுகின்ற இடைமாற்ற நிலையங்களை நிறுவுதல், மற்றும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு கல்வி, தொழில்சார் பயிற்சி சுகாதாரம் மற்றும் நிறை உணவுத் திட்டங்கள், மனோவியல் கவனிப்புகள் போன்றவை உட்பட பல வேலைத் திட்டங்களை மேற் கொள்வதற்காகவே இச் செயற்திட்டம் உருவாக்கப்பட்டது. இதனை 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புலிகள் இயக்கமும் அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது மட்டுமன்றி, 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் இருசாராரும் சம்பிரதாய பூர்வமாக இதில் கையொப்பமிட்டனர். இச் செயற்திட்டம் தொடர்பாக இரு சாராரோடும் அணுகி பேச்சுவார்த்தை நடத்தும் பிரதான பாத்திரத்தை யுனிசெப் வகித்ததோடு அதுவே இதனை நடைமுறைப்படுத்தும் பிரதான பங்காளராகவும் இருந்தது.

இச்செயல் திட்டம் கையொப்பமிடப்பட்ட நாளிலிருந்து, விடுவிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையை விடவும், படைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையானது இரு மடங்கை விட அதிகமானது என்பதையே யுனிசெப் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் திறக்கப்பட்ட ஒரு இடைமாற்ற (Transit Center) நிலையமானது தனது முதலாவது வருட செயற்பாட்டில் மொத்தமாக 172 சிறார்களையே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. அந்த நிலையமானது 100 சிறார்களை ஒரே நேரத்தில் வைத்திருக்கக் கூடிய வசதிகளை கொண்டிருந்தாலும், ஒரு பொழுதுமே அது 49 சிறார்களுக்கு மேல் கொண்டிருக்கவில்லை. அதே வேளை 2004ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆறு வார காலத்திற்கு அந்த நிலையமானது முழுதாக மூடப்பட்டே இருந்துள்ளது. இதைத் தவிர மேலும் இரு இடைமாற்று நிலையங்கள்

---

[9] ரேச்சல் ப்ரெட்டும் மார்கரெட் மெக்கலினும், (Rachel Brett & Margaret McCallin) *சிறார்கள் : கண்களுக்குப் புலப்படாத படையினர்கள்,* ராட்டா பார்னென், 1998 பக். 98, 99. இக்கற்கையானது ஐ.நா வின் சிறார்களின் மீது மோதல்களின் தாக்கம் என்னும் கற்கைக்காக மேற்கொள்ளப்பட்டது. க்ராக்கா மாச்செல் (Graca Machel) என்பவரால் தயாரிக்கப்பட்டு 1996 இல் ஐ.நா. விற்கு கையளிக்கப்பட்டது.

[10] உதா.குனரட்ணவின் *"புலிகள் இயக்க சிறார் போராளிகள்"*; ய்வோனே க்யர்ன்ஸ் இனுடைய (Yvonne Keairns), *சிறீ லங்காவில் பெண் சிறார் படையினர்களின் குரல்கள்,* என்பவற்றைப் பாருங்கள். குவேக்கர் அமைப்பின் ஐ.நா. காரியாலயம். 2003

[11] வெளிநாட்டு உறவுகளுக்கான சபை , *பயங்கரவாதிகள், கேள்வியும் பதிலும்: தமிழீழ விடுதலைப் புலிகள்,* 2004

அமைக்கப்பட்டிருந்தாலும் மிக குறைந்த எண்ணிக்கையான சிறார்களின் வருகை காரணமாக அவை திறக்கப் படாமலேயே இருந்தன.[12]

## *சட்டத் தராதரங்கள்*

சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளுவதை முடிவுக்கு கொண்டு வரவேண்டிய தமது கடப்பாட்டை நிறைவேற்றுவது தொடர்பாக, புலிகள் இயக்கமானது தான் வழங்கிய உறுதிப்பாட்டை எல்லா வழிகளாலும் நிறைவேற்றத் தவறியுள்ளது. புலிகள் இயக்கத்தினால் தொடர்ச்சியாக சிறார்களை படையில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையானது, சிறார்களை படைகளில் சேர்ப்பது அல்லது அவர்களை மோதலில் பங்கேற்க செய்வது என்பவற்றை குறிப்பாக தடைசெய்கின்ற சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறுவதாகவே இருந்து வந்துள்ளது. சிறீ லங்கா உட்பட அண்மையில் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர்களின் உரிமை தொடர்பான சட்டத்தின்படியும், 1949ம் ஆண்டு ஜெனிவா சட்ட திட்டத்தின் மேலதிக சட்ட வரைபுகளின்படியும் 15 வயதிற்கு உட்பட்ட சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதும் மோதல்களில் ஈடுபடுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தராதரமானது தற்போது ஒரு சாதாரண சர்வதேச சட்டமாக கொள்ளப்படுவதோடு, இவ்வாறான ஆட்சேர்ப்பானது சர்வதேச குற்றச்செயல் நீதிமன்றத்தின்படி (International Criminal Court) ஒரு யுத்தக் குற்றமாகவும் (war crime)இனம் காணப்படுகின்றது.

ஒருவரை இராணுவ சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஆக குறைந்த வயதெல்லையான 15 வயதானது மிக குறைவானது என்று, 1990ம் ஆண்டு பிற்பகுதியில் காணப்பட்ட புதியதொரு சர்வதேச பொது இணக்கப்பாடானது, இது தொடர்பாக இன்னும் பலமான தராதரங்களை ஏற்படுத்தியது. 1999ம் ஆண்டில் சர்வதேச தொழில் நிறுவனம் (ILO) ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தின் மூலம், 18 வயதிற்கு குறைந்த சிறார்களை பலவந்தமாகப் படையில் சேர்த்துக் கொள்வது, அவர்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவது என்பவை அதி மோசமான சிறார் தொழில் முறைமை என அவற்றைத் தடை செய்கிறது. 2000 ஆண்டில் ஐ.நா.வினால் பிரகடனப்படுத்தப்பட்டு, இலங்கை அரசாங்கத்தால் அதே ஆண்டில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட, சிறாகள் உரிமைகள் சட்டம் தொடர்பான மேலதிக சரத்தின் மூலம், அரசசார்பற்ற ஆயுதக் குழுக்களினால் பலவந்தமாக பிடிக்கப்படுகின்ற, சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மற்றும் சண்டைகளில் ஈடுபடுத்தப் படுகின்றவர்களின் ஆகக் குறைந்த வயதெல்லையானது 18ஆக இருக்க வேண்டும் என நிறுவப்பட்டுள்ளது.

## *முறைமை தொடர்பாக ஒரு குறிப்பு*

சிறார்களை படைகளில் சேர்ப்பது மற்றும் அவர்களை பயன்படுத்துவது என்னும் விடயம் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளியிடும் பதினைந்தாவது அறிக்கை இதுவாகும். இதற்கு முன்னர் அங்கோலா, பர்மா, புறூண்டி, கொலம்பியா, கொங்கோ ஜனநாயக குடியரசு, லெபணான், லைபீரியா, ருவாண்டா, சியெரா லியோண், சூடான், மற்றும் உகண்டா போன்ற இடங்களிலும் இந் நடவடிக்கைகள் தொடர்பாக நாம் குறிப்பான அறிக்கைகளை வெளியிட்டுள்ளோம்.

இவ் அறிக்கையைத் தயாரிப்பதற்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிறீ லங்காவில் ஆய்வொன்றை நடத்தியது. நியூ யோர்க் மற்றும் ஹெய்க் ஆகிய இடங்களில் இருந்து பெரும்பாலும் தொலைபேசி மற்றும் மின் அஞ்சல் மூலமாகவும் இவ் ஆய்வை மேற்கொண்டது. அதே வேளை எமது ஆய்வாளர்கள் கொழும்பு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தனர். இத்தகவல் அறியும் பணியின் போது தமது 12க்கும் 17க்கும் இடைப்பட்ட வயதுகளில் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முன்னாள் சிறார் படையினர் 35பேர்களுடன் நாம் கதைத்தோம். நாம் அவர்களைப் பேட்டி காண்கின்ற பொழுது அவர்களின் வயதுகள் 14 தொடக்கம் 21வரையாக இருந்தன. அவர்களில் அநேகமானோர் 2001ம் ஆண்டுக்கும் 2004ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்ததோடு, அவர்கள் மூன்று வாரங்கள் முதல் எட்டு ஆண்டுகள் வரை புலிகள் இயக்கத்தினுள் களித்துள்ளனர். இச்சிறார்கள் பருமட்டாக புலிகள் இயக்கத்திற்குள் இருந்த காலமானது 2.7 ஆண்டுகளாகும்.

அதுமட்டுமன்றி இவ்வறிக்கைக்காக நாம் இன்னும் நாற்பதிற்கு மேற்பட்ட பேட்டிகளைக் கண்டுள்ளோம். அவற்றுள் பெற்றோர்களுடன் கதைத்தல், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கதைத்தல் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள், புலிகள் இயக்கம் செல்வாக்குச் செலுத்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO), சர்வதேச தொழில் நிறுவனம் (ILO) மற்றும் சிறீ லங்கா கண்காணிப்புக் குழு

[12] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஆகஸ்ட் 2004ல் சிறீ லங்காவில் யுனிசெப்புடன் நடத்திய பேட்டிகள். 2004 செப்டெம்பரில் யுனிசெப்பானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் நடத்திய மின்னஞ்சல் தொடர்பாடல்கள்.

(SLMM) போன்றவை உள்ளடங்குகின்றன. அதே வேளை நாங்கள் சிறீ லங்கா அரசாங்கம் மற்றும் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் பேசினோம்.

மீள ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கும், அத்தோடு தொடர்புடைய உண்மையான அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அவர்களின் தனிப்பட்ட விடயங்கள் (Privacy) பாதுகாக்கப்படுகின்ற நோக்கில் இவ்வறிக்கையில் உள்ள சகல சிறார்களின் பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன. மேலும் பல பாதுகாப்பு காரணங்களுக்காக இவ் அறிக்கைக்காக நடத்தப்பட்ட பேட்டிகளுடன் தொடர்புடைய தனி நபர்கள், அமைப்புக்கள் மற்றும் பேட்டிகள் நடத்தப்பட்ட இடங்கள் சம்பவங்கள் என்பவை இங்கே எம்மால் வெளியிடப்பட வில்லை.

இவ்வறிக்கையில் 18 வயதிற்கு குறைந்த நபர்களையே “சிறார்கள்” என்னும் சொற்பதம் குறிக்கின்றது.

# II பரிந்துரைகள்

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE):

- சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும். கருணாவின் படையணிகளில் இருந்த முன்னாள் சிறார் போராளிகளை மீளச் சேர்ப்பதையும், அதற்காக மேற்கொள்ளும் பதிவு முயற்சிகளையும், உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.
- புலிகள் இயக்கத்தில் இருக்கும் 18 வயதிற்கு குறைந்த சகல சிறார்களையும் விடுதலை செய்வதோடு 18 வயதிற்கு முன்னரே சேர்க்கப்பட்டவர்களுக்கும் அதை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.
- 18 வயதிற்கு குறைந்த எவரையும் தாம் படைகளில் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை என்னும் தமது கடப்பாட்டை சிறீ லங்காவில் வடக்கு கிழக்கு எங்கும் வாழும் குடும்பங்களுக்கு பகிரங்க அறிவித்தல் மூலம் அறியத் தரவேண்டும். அதற்கு புலிகள் இயக்கத்தின் சொந்த ஊடகங்கள் உட்பட சகல உள்ளூர் ஊடகங்களையும் பயன்படுத்துவதோடு, ஆட்களைச் சேர்ப்பதற்கான தமது அறிவிப்புப் பிரசுரங்களில் தம்முடன் சேர்வதற்கான ஆக குறைந்த வயதெல்லையானது 18 என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.
- தமது தளபதிகள் மற்றும் அங்கத்தவர்கள் எக்காரணம் கொண்டும், புலிகள் இயக்கத்தின் படைகளுக்குள் 18 வயதிற்கு குறைந்த சிறார்களை, அவர்கள் “சுயமாக” வந்தாலும் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு, அவ்வாறு சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடும் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் மீது எடுக்கப்படுகின்ற ஒழுக்க கட்டுப்பாடு பற்றிய ஆவணம் ஒன்றை சர்வதேச சமூகத்திடம் (யுனிசெப் இற்கூடாக) தாமாகவே முன்வந்து வழங்க வேண்டும்.
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற் திட்டத்தின் கீழ் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து கடப்பாடுகளையும் நிறைவேற்றல் வேண்டும்.
- 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் யுனிசெப் நிறுவனத்தினால் புலிகள் இயக்கத்திடம் கையளிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சார நடவடிக்கையை பரவலாக மேற்கொள்வதற்கு உடனடியாக அனுமதியை வழங்க வேண்டும்.
- யுனிசெப் அமைப்பானது சகல இராணுவப் பயிற்சி முகாம்களுக்கும் செல்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அங்குள்ளவர்களின் வயதுகளை மதிப்பீடு செய்யவும், வயது குறைந்த சிறார்களை அங்கிருந்து விடுவிக்கவும் வகைசெய்தல் வேண்டும்.
- இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்ற, படையில் சேர்க்கப்பட்ட வயது குறைந்தவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு உயர்மட்ட பணிக் குழு (Task Force) ஒன்றை உருவாக்க வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பான முறைப்பாடுகள் பற்றி பொறுப்புச் சொல்லுபவர் யார் என்பதை தெளிவாக நியமித்து அறியத் தருவதோடு, புதிதான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பாக உடனடி பதில் வழங்கக்கூடிய நேரடி தொலைபேசி (Hotline) தொடர்பொன்றையும் நிறுவ வேண்டும்.
- தொடர்ச்சியாக யுனிசெப் அமைப்பினால் எழுப்பப்படும் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய நிலமைகள் என்ன என்பதை வெளியிட வேண்டும்.

## சிறீ லங்கா அரசாங்கத்திற்கு:

- புலிகள் இயக்கத்தில் இருந்து சிறார்கள் உடனடியாக விலக்கப்படுவதும், சிறார்கள் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படுவது முடிவுக்கு கொண்டுவரப் படுவதும், புலிகள் இயக்கத்துடனான புதிய சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- சிறார்கள் கடத்திச் செல்லப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்ற கோயில் திருவிழாக்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றிற்கு அருகே அரசாங்கம் தனது இருப்பை அதிகரிப்பது உட்பட, அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில், சிறார்கள் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- பாதுகாப்பு படைகளுக்குள் தமிழ் பேசக் கூடியவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதோடு தமிழர் அல்லாதவர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சியை வழங்குவதன் மூலம் சிறீ லங்கா இராணுவம் மற்றும் பொலீசாருக்கு தமிழ் சமூகத்துடனான உறவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- புலிகள் இயக்கத்தில் பங்கு கொண்ட சகல முன்னாள் சிறார் படையினருக்கும் சம்பிரதாய பூர்வமாக மன்னிப்பு வழங்க வேண்டும்.
- அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள உரித்துடைய அனைவருக்கும் (முன்னாள் சிறார் படையினர் உட்பட எவ்வித பாரபட்சமும் காட்டப்படாமல்) அடையாள அட்டைகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற தொழில்சார் கல்வி நெறிகளுக்கு முன்னாள் சிறார் படையினரும் சேர்ந்து கொள்வதை ஊக்குவிக்கின்ற நோக்கில் அந் நெறிகளுக்கான வழமையான நுளைவுத் தேர்வு அவசியப்பாடுகளில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.
- ஹக்கோனே பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட, சிறீ லங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையோடு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோமைய சாசனத்தில் (Rome Statute ) கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்

## ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திற்கு (UNICEF):

- சிறார்களை படைகளில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாகவும் ஏற்கனவே படைகளில் இருக்கும் சிறார்களை விடுதலை செய்வது தொடர்பாகவும் புலிகள் இயக்கத்தின் கடப்பாடு மற்றும் பொறுப்புச் சொல்லல் தொடர்பாக உறுதியான கால வரையறைகளுடன் கூடிய தராதரங்களை அமைத்தல் வேண்டும். அவ்வாறு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் புலிகள் இயக்கமானது அவற்றை நிறைவேற்றத் தவறுகின்ற பட்சத்தில், இடைமாற்று நிலையங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் இடை நிறுத்துவதோடு, இடைமாற்று நிலையங்களின் பணிக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப்படுகின்ற சகல நிதிகளும் இடை நிறுத்தப்பட வேண்டும்.
- முன்னாள் சிறார் படையினர்கள் மீளப் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதை தடுப்பது உட்பட, சிறார்ளை படைகளில் சேர்க்கும் நடவடிக்கையை தடுக்ககூடிய சகல முயற்சிகளையும் தொடர்ச்சியாக பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- சிறார்கள் படையில் சேர்க்கப்படுதலை திறம்பட கண்காணித்தல் என்பதை நோக்கமாக கொண்டு, உள்ளூர் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் செயல் உறவையும் தொடர்புகளையும் பலப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிறந்த ஆதரவுகளை வழங்குவதோடு சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதற்கு எதிராக அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்கும் ஆதரவு வழங்குவது உட்பட காத்திரமான தடுப்பு மூலோபாயங்களையும் நடைமுறைப் படுத்தல் வேண்டும்.
- சிறார்கள் படையில் சேர்க்கப்படுகின்ற சம்பவங்களின் போது இயன்ற அளவு விரைவாக தலையீடு செய்வதுடன், தமது பிள்ளைகளை மீளப் பெறுவதற்கான அக்குடம்பங்களின் முயற்சிகளோடு இயன்ற பொழுதெல்லாம் இணைந்து செயல்ப்பட வேண்டும்.
- புலிகள் வழங்குகின்ற பதிலுரைகள் உட்பட ஆட்சேர்ப்பு மற்றும் சிறார்கள் விடுவிப்பு போன்ற சம்பவங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை கிரமமாக வெளியிட வேண்டும்.

## சர்வதேச தொழில் நிறுவனத்திற்கு (ILO):

- முன்னாள் சிறார் படையினருக்கான தொழில்சார் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற தலைமைப் பங்காளி என்னும் நிலையில் இருந்து, தொழில்சார் பயிற்சி வாய்ப்புக்களை உருவாக்குவதோடு பொருத்தமான இடங்களில் புலிகள் இயக்கத்தினுள் இருந்து இராணுவமல்லாத பயிற்சிகளைப்பெற்ற முன்னாள் படையினரையும் இதற்கு பயன்படுத்துதல் (உதா. மருத்துவ பயிற்சி) வேண்டும்.

## மனித உரிமைகளுக்கான வடக்கு கிழக்கு ஆணைக்குழுவிற்கு (NECOHR):

- சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதை கண்டித்து பகிரங்க அறிக்கை யொன்றை வெளியிடுவதுடன், சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதை தடுக்கவும் புலிகள் இயக்கத்தில் இருந்து சிறார்களை பாதுகாத்துக் கொள்வதற்கு மேலும் ஒத்திசைவான மூலோபாயங்களை, யுனிசெப் மற்றும் சிறீ லங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுடன் கூட்டாக இணைந்த வகையில கட்டி எழுப்புதல் வேண்டும்.

## நோர்வே அரசாங்கத்திற்கு:

- சமாதான நடவடிக்கையின் வசதிப்படுத்துனர் என்கின்ற வகையில், புலிகள் இயக்கத்தில் உள்ள சிறார்கள் அனைவரும் உடனடியாக கலைக்கப் படுகின்ற விடயத்தையும், சிறார்கள் படையில் சேர்க்கப்படுகின்ற நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப் படுவதையும் எந்தவொரு புதிய சமாதான ஒப்பந்தத்தினதும் ஒரு பகுதியாக உறுதிப்படுத்த வேண்டும்.
- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் "அரசியல் பணிகள்" மேற்கொள்ளல் என்பதற்குள் எவ்வகையிலும் சிறார்களை படைகளில் சோத்துக் கொள்ளுதல் என்பது உள்ளடக்கப் படவில்லை என்பது தொடர்பாக தெளிவான புரிந்து கொள்ளலுக்கான பேச்சுக்களை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மேற்கொள்ள வேண்டும்.

## சிறீ லங்கா கண்காணிப்பு குழுவினருக்கு (SLMM):

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சாதாரண பொதுமக்களை இடைஞ்சலுக்கு உள்ளாக்குதல், கடத்துதல், பலவந்தமாக பணம் சேகரித்தல், அச்சுறுத்துதல் போன்ற தடைசெய்யப்பட்டுள்ள விடயங்களோடு, சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுகின்ற விடயம் தொடர்பாகவும் தொடர்ச்சியானதும், காத்திரமானதுமான கண்காணிப்புகளை மேற்கொண்டு அறிக்கைப் படுத்த வேண்டும்.
- குறிப்பான சம்பவங்கள் உட்பட சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக புலிகள் இயக்கத்திடம் கிரமமாகவும் தொடர்ச்சியாகவும் கேள்விகளை எழுப்பதல் வேண்டும்.
- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள சர்வதேச சட்டங்கள் மீறப்படுவதை ஓர் ஒழுங்கு முறைப்படி கண்காணிப்பதற்கென்றே முழுமையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மனித உரிமைப் பிரிவு ஒன்றை நிறுவுவதோடு அதில் பயிற்சி பெற்ற மனித உரிமை கண்காணிப்பாளர்களை பணிக்கு அமர்த்த வேண்டும்.

## நிதி வழங்குநர்களுக்கு (ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஸ்கென்டிநேவிய நாடுகள் உட்பட):

- புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் போது உடனடி தலையீடுகளைச் செய்யக் கூடிய வகையில் உள்ளூர் தரப்பினர் மற்றும் யுனிசெப் அமைப்புடன் மிக நெருக்கமான தொடர்பை வைத்திருக்கக்கூடிய நிதி வழங்குநர் விசேட பணிக் குழு (Donor Task Force) ஒன்றை நிறுவ வேண்டும்.
- ஹக்கோனே பேச்சுவார்த்தைகளில் சுட்டிக் காட்டப்பட்டபடி சிறீ லங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற் ஒத்தாசை வழங்கக்கூடிய வகையில், சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நிதி மற்றும் அடிப்படை வசதிகளையும் வழங்க வேண்டும்.
- வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற நிறுவனங்களுக்கு ஊடாக வழங்கப்படுவதன் பொருத்தப்பாட்டை கவனத்திற்குள்ளாக்க வேண்டும்.

- தற்போது புலிகள் இயக்கத்தின் படை அணிகளில் இருக்கும் சிறார்கள் அனைவரும் விடுவிக்கப்படுவதை ஊக்குவிப்பதற்கும், புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் அழுத்தமிடக் கூடியவகையில் பொருளாதார அழுத்தத்தைப் பாவிக்க வேண்டும்.

## புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கு:

- சிறீ லங்காவில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மானுட சட்டங்கள் மோசமாக மீறப்படுவற்கும், புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது மற்றும் ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தப்படுவது என்பவற்றுக்கும் எதிராக உங்கள் மறுப்பை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.
- புலிகள் இயக்கத்தால் தொடர்ந்தும் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையும், மோசமான மனித உரிமைகள் மீறப்படுதலும் மேற்கொள்ளப் படுகின்ற பட்சத்தில், சிறீ லங்காவில் உள்ள அமைப்புகளுக்கு நீங்கள் அனுப்பிவைக்கின்ற நிதியானது நேரடியாகவோ மறைமுகமாகவோ புலிகள் இயக்கத்தின் பயன்பாட்டிற்கு செல்லாமல் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

## புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் கணிசமாக உள்ள நாடுகளான, கனடா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் (UK), அமெரிக்கா, மற்றும் ஸ்கென்டிநேவிய நாடுகளுக்கு:

- புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைக்கு எதிரான உங்கள் அரசாங்கங்களின் தெளிவான கண்டனங்களை தமிழ், மற்றும் பொதுவான ஊடகங்களுக்கு ஊடாகவும் மற்றும் புலம்பெயர் தமிழர் சார்பான தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு ஊடாகவும் தெளிவாகத் தெரியப்படுத்தல் வேண்டும்.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு (UN Security Council):

- சிறார்களும் ஆயுத மோதல் நிலமைகளும் தொடர்பான பாதுகாப்பு சபையின் (2004 ஏப்ரல், 22) 1539வது தீர்மானத்தின், 6வது பந்தியின் படி, சிறார்களை படையில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டுவர புலிகள் இயக்கம் தவறி உள்ள நிலமையைக் கையாளுவதற்கு குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அந்நடவடிக்கைகளாவன, தலைவர்கள் பயணம் செய்வதற்கான கட்டுப்பாடுகளை விதித்தல், சகலவித ஆட்சி கட்டுமானங்கள் மற்றும் மன்னிப்பு நிபந்தனைகளில் இருந்தும் அவர்களை தவிர்த்தல், சிறிய ரக ஆயுதங்களை தடைசெய்தல், இராணுவ உதவிகளை தடைசெய்தல் மற்றும் நிதி வளங்களின் வருகையை கட்டுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.
- சிறார்களும் ஆயுத மோதல் நிலமைகளும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், பாதுகாப்புச் சபையின் கொழும்பிலுள்ள உள்நாட்டு தூதரகமானது புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டு சிறார்கள் விடுவிக்கப்படுவது தொடர்பான முன்னேற்றம் குறித்து அழுத்தமிட வேண்டும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து அங்கத்துவ நாடுகளுக்கும்:

- சிறார்களும் ஆயுத மோதல் நிலமைகளும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் 1379வது (2001 நொவம்பர், 20) தீர்மானத்தின் 9வது பந்தியின் அடிப்படையில், மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் யாவரும் சிறார்கள் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச தராதங்களை மதிப்பதை உறுதி செய்வதற்காக, சட்ட, அரசியல், இராஜதந்திர, பொருளாதார, மற்றும் பொருள் ரீதியான சகல அழுத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக புலிகள் இயக்கமானது தமது படையணிகளில் இன்னமும் வைத்திருக்கும் அனைத்து சிறார்களையும் விடுதலை செய்வது மற்றும் சிறார்களை படைகளில் சேர்ப்பதை முற்றாக நிறுத்திக் கொள்ளும்வரை அவர்களுக்கான சகலவித பொருளாதார மற்றும் அரசியல் அல்லது இராணுவ உதவிகளை நிறுத்திவைப்பதோடு புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது மற்றும் அவர்களை படையினர்களாக பாவிக்கும் செயற்பாட்டை இந்நாடுகள் குறிப்பாக ஒரே குரலில் கண்டனத்திற்கு உள்ளாக்க வேண்டும்.